**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, CHERANMAHADEVI**

Case No.**CC.476/2025**

**Prosecution witness.1**

| | |
|---|---|
| பெயர் : மகராசி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | சமயம் : |
| கிராமம் : | வயது : |
| தாலுகா : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of June 2026.

**23.06.2026**

(எதிரிகள் ஆஜர்)

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். 2025 ம் வருடம் எங்கள் குடும்ப பிரச்சனை காரணமாக நான் காவல்நிலையத்தில் போலிசாரிடம் கூறியபோது போலிசார் எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1** ). நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம். எதிரிகள் என்னை அசிங்கமாக பேசியதாகவோ, அடித்து காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவோ எந்த வித புகார்மனுவோ, புகார் வாக்குமூலமோ கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** கடந்த 01.07.2025 ம் தேதி நான் மதியம் வீட்டில் இருந்த போது, ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் என்னையும் என் கணவரையும் கம்பால் அடிக்க ஓடிவந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் நானும், என் கணவர் சத்யாவும் உயிருக்கு பயந்து எனது அம்மா வீட்டிற்கு சென்று விட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் அன்றையதினம் 19.00 மணியளவில் எனது அம்மா வீட்டிற்கு வந்து ஆஜர் எதிரிகள் என்னை பொது இடத்தில் வைத்து, அசிங்கமாக பேசி அவமானத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் கம்பால் என் இடது கை பெருவிரல், முதுகில் அடித்தும் காயங்கள் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல.

**2)** சம்பவத்தை பார்த்த நபர்கள் சத்தம்போட்டு எதிரிகளை விலக்கிவிட்டதும் எதிரிகள் என்னைப் பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

**3)** பின்னர் வழக்கு சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வீரவநல்லூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துவிட்டு தற்சமயம் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்ட படியாலும், எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்பதாலும் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

சாட்சியின் கையொப்பம்

சாட்சி என் முன்பாக விசாரிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
சேரன்மகாதேவி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, CHERANMAHADEVI**

Case No.**CC.476/2025**

**Prosecution witness.2**

| | |
|---|---|
| பெயர் : சத்யா | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | சமயம் : |
| கிராமம் : | வயது : |
| தாலுகா : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of June 2026.

**23.06.2026**

(எதிரிகள் ஆஜர்)

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா1 என் மனைவி. ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார்கள். 2025 ம் வருடம் எங்கள் குடும்ப பிரச்சனை காரணமாக காவல்நிலையத்தில் போலிசாரிடம் கூறியபோது போலிசார் எழுதாத வெள்ளைதாளில் என் மனைவி அ.சா1 னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

2. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம். எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசியதாகவோ, அடித்து காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, அ.சா1ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவோ எந்த வித புகார்மனுவோ, புகார் வாக்குமூலமோ கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி**: இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில்

அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 01.07.2025 ம் தேதி நானும், அ.சா1 ம் மதியம் வீட்டில் இருந்த போது, ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் என்னையும் அ.சா1 யையும் கம்பால் அடிக்க ஓடிவந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் நானும், அ.சா1 ம் உயிருக்கு பயந்து அ.சா1 ன் அம்மா வீட்டிற்கு சென்று விட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் அன்றையதினம் 19.00 மணியளவில் அ.சா1 ன் அம்மா வீட்டிற்கு வந்து ஆஜர் எதிரிகள் எங்களை பொது இடத்தில் வைத்து, அசிங்கமாக பேசி அவமானத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் கம்பால் அ.சா1 ன் இடது கை பெருவிரல், முதுகில் அடித்தும் காயங்கள் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல.

**2)** சம்பவத்தை பார்த்த நபர்கள் சத்தம்போட்டு எதிரிகளை விலக்கிவிட்டதும் எதிரிகள் எங்களைப் பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

**3)** பின்னர் வழக்கு சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க அ.சா1 வீரவநல்லூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துவிட்டு தற்சமயம் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்ட படியாலும், எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்பதாலும் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

சாட்சியின் கையொப்பம்

சாட்சி என் முன்பாக விசாரிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
சேரன்மகாதேவி

# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, CHERANMAHADEVI
Case No.**CC.476/2025**
**Prosecution witness.3**

| | |
|---|---|
| பெயர் : செண்பக வள்ளி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | சமயம் : |
| கிராமம் : | வயது : |
| தாலுகா : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of June 2026.

**23.06.2026**

(எதிரிகள் ஆஜர்)

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா1 என் மகள்.அ.சா2 என் மருமகன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். அவர்கள் அ.சா2 ன் உடன் பிறந்த அண்ணன் ஆவார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 01.07.2025 ம் தேதி அ.சா1, அ.சா2 ம் மதியம் வீட்டில் இருந்த போது, ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் அ.சா1, அ.சா2 யையும் கம்பால் அடிக்க ஓடிவந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் அ.சா1, அ.சா2 ம் உயிருக்கு பயந்து என் வீட்டிற்கு சென்று விட்டோம்

என்றால் சரியல்ல. பின்னர் அன்றையதினம் 19.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்து ஆஜர் எதிரிகள் எங்களை பொது இடத்தில் வைத்து, அசிங்கமாக பேசி அவமானத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் கம்பால் அ.சா1ன் இடது கை பெருவிரல், முதுகில் அடித்தும் காயங்கள் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல.

2) சம்பவத்தை பார்த்த நபர்கள் சத்தம்போட்டு எதிரிகளை விலக்கிவிட்டதும் எதிரிகள் எங்களைப் பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

3) பின்னர் வழக்கு சம்பவத்தினை நேரில் பார்த்ததாக போலீஸ் விசாரணையின் போது கூறிவிட்டு, தற்சமயம் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்ட படியாலும், எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்பதாலும் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> - இல்லை.

சாட்சியின் கையொப்பம்

சாட்சி என் முன்பாக விசாரிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
சேரன்மகாதேவி